# யூன் – 22 - வியாழன்

## புனிதர்கள் ஜோன் பிசர் மற்றும் தோமஸ் மூர்

**ஆவரது செயல் மேன்மையும் மாண்பும் மிக்கது: அவரது நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.**
**திபா. 111:3**

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 11 : 1 – 11

சகோதர சகோதரிகளே, என் அறிவீனத்தை நீங்கள் சற்றுப் பொறுத்துக் கொள்ள வேண்டும் ஆம் சற்றே பொறுத்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது கடவுள் கொண்டுள்ள அதே அன்பார்வத்தை நானும் கொண்டுள்ளேன். கிறிஸ்து என்னும் ஒரே மணமகனுக்கும் உங்களுக்குமிடையே மண ஒப்பந்தம் செய்துள்ளேன். அவர்முன் உங்களைக் கற்புள்ள கன்னியாக நிறுத்த வேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால் ஏவா பாம்பின் சூழ்ச்சியினால் ஏமாற்றப்பட்டதைப் போல நீங்களும் உங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டுக் கிறிஸ்துவிடம் விளங்கிய நேர்மையையும் தூய்மையையும் இழந்து விடுவீர்களோ என அஞ்சுகிறேன். உங்களிடம் யாராவது வந்து, நாங்கள் அறிவித்த இயேசுவைத் தவிர வேறு ஓர் இயேசுவைப் பற்றி அறிவித்தால், அல்லது நீங்கள் பெற்ற தூய ஆவியைத் தவிர வேறு ஓர் ஆவியைப்பற்றிப் பேசினால், அல்லது நீங்கள் ஏற்ற நற்செய்தியைத் தவிர வேறு ஒரு நற்செய்தியைக் கொண்டு வந்தால் நீங்கள் அவர்களை எளிதாக ஏற்றுக் கொள்கிறீர்கள். இப்படிப்பட்ட "மாபெரும்" திருத்தூதரை விட நான் எதிலும் குறைந்தவன் அல்லேன் என்றே கருதுகிறேன். நான் நாவன்மையற்று இருக்கலாம் ஆனால் அறிவு அற்றவன் அல்ல் இதை எப்போதும் எல்லா வகையிலும் உங்களுக்குத் தெளிவுபடுத்தியே இருக்கிறோம். ஊதியம் எதுவும் எதிர்பார்க்காமல் நான் உங்களுக்கு நற்செய்தி அறிவித்தேன். நீங்கள் உயர்வுபெற நான் தாழ்வுற்றேன். இதுதான் நான் செய்த பாவமா? நான் உங்களிடையே பணிபுரிந்தபோது என் செலவுக்கு வேண்டியதை மற்றத் திருச்சபைகளிடமிருந்து பெற்றுக் கொண்டேன். உங்களுக்காக அவர்களைக் கொள்ளையிட்டேன் என்றே சொல்லலாம். நான் உங்களோடு இருந்தபோது எனக்குப் பற்றாக்குறை இல்லாமல் இல்லை. எனினும் நான் உங்களில் எவருக்கும் சுமையாய் இருந்ததில்லை. மாசிதோனியாவிலிருந்து வந்த அன்பர்கள் என் பற்றாக்குறையைப் போக்கினார்கள். நான் எதிலும் உங்களுக்குச் சுமையாய் இருந்ததில்லை இனி இருக்கவும் மாட்டேன். கிறிஸ்துவின் உண்மையே என்னுள்ளும் இருப்பதால் நான் பெருமைப்படுவதை அக்காயா பகுதியிலுள்ள யாரும் தடுக்க முடியாது. ஏன் இப்படிச் சொல்கிறேன்? உங்களிடம் எனக்கு அன்பே இல்லை என்பதாலா? நான் உங்கள் மீது அன்புகொண்டவன் என்பது கடவுளுக்குத் தெரியும்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் செயல்கள் நம்பிக்கைக்குரியவை. நீதியானவை

## நற்செய்தி : மத்தேயு 6 : 7 - 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.") மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது செபமானது எமது வாழ்க்கையில் இன்றியமையாதது என்றும், அது எம்மையும் இறைவனையும் இணைக்கும் பாலமாக அமைகின்றது என்பதையும் தெரிவித்து நிற்கின்றது. இறைவனோடு இணைக்கும் இச்செபவாழ்வை நாங்கள் ஏதோ கடமைக்குச் செபிப்பதுபோன்று மற்றவர்கள் எங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காக செபிக்கின்றோம். வழிபாடுகளில் பங்குபற்றுகின்றோம், திருப்பலிக்குச் செல்கின்றோம். ஆனால் எமது வாழ்க்கை முறையோ வெளி வேடமானதாகவே காணப்படுகின்றது. இவ்வாறு வெளிவேடமாக வாழ்ந்தோமேயானால் எவ்வாறு இறைமகன் இயேசு எமது செபத்தை ஏறெடுப்பார்? எமது தேவைகளை சந்திப்பார்.? எம் உள்ளத்தில் வந்து தங்குவார்? வெளிவேடக்காரரே உங்களுக்கு ஐயோ கேடு என்று பரிசேயருக்கும், மறைநூல் அறிஞருக்கும் இயேசு கூறுவதை வேதாகமத்தில் பார்க்கின்றோம். இவ்வாறான வெளிவேட வாழ்வு வாழாமல் இறைவனின் தண்டணையிலிந்து விலகி வாழ செபமானது எமக்கு கட்டாயம் தேவையானதாகும். அன்று அன்னை மரியாள் இறைவார்த்தையை வாசித்து அதை தியானித்து கடைப்பிடித்து அனுதினமும் செபித்து வந்தாள். ஆவியானவரால் நிரப்பப்பட்டாள். அதேபோன்று ஆதிக்கிறஸ்தவர்கள் கூட ஒருமனதோடு செபித்து வந்தார்கள். இறை அருளை நிறைவாகப் பெற்றுக்கொண்டார்கள். எனவே நாங்களும் செபிப்பதன் மூலம் தந்தை மகன் உறவை பலப்படுத்தி, ஆவியானவரால் வழிநடத்தப்பட அனுதினமும் இறைவார்த்தை வாசித்து தியானித்து வாழ்வதன் மூலம் அவர் அருளைப் பெற்றுக் கொள்வோம்.